# அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி,
## (தன்னாட்சி)
## சின்னக்கலையம்புத்தூர், பழனி.

***2020–2021 ஆம் கல்வியாண்டிற்கான இளநிலை முதலாமாண்டு மாணவியர் சேர்க்கை கலந்தாய்விற்கான வழி முறைகள்***

- அரசு உதவி பெறும் பாடப்பிரிவுகளின் இளநிலை முதலாமாண்டு மாணவியர் சேர்க்கைக்கான தரவரிசைப்பட்டியல் கல்லூரியின் இணையதள பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் கல்லூரியின் இணையதள முகவரியில் (www.apacwomen.ac.in) சென்று தங்களுக்கான தரவரிசை எண்ணை தெரிந்துக்கொள்ளவும்.

- அலைபேசி அழைப்புகள் மூலம் கலந்தாய்வு நடைபெறவுள்ளதால் விண்ணப்பதாரர்கள் 28.08.2020 மற்றும் 29.08.2020 ஆகிய இருநாட்களும் பதிவின் போது கொடுக்கப்பட்ட அலைபேசி எண்ணிற்கான அலைபேசியை தங்கள் வசம் வைத்திருக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- விண்ணப்பதாரர்கள் தங்களின் அசல் சான்றிதழ்களான மாற்றுச்சான்றிதழ், சாதிச் சான்றிதழ், +2 மதிப்பெண் சான்றிதழ், விளையாட்டுச் சான்றிதழ், உடல் ஊனமுற்றோர் சான்றிதழ், முன்னாள் இராணுவ வீரர் சான்றிதழ் மற்றும் தேசிய மாணவர் படை (NCC) ஆகியவற்றை கலந்தாய்விற்கான அலைபேசி அழைப்பின் போது தங்கள் வசம் வைத்திருக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- விண்ணப்பதாரர்கள் தங்களுக்கான மாணவியர் சேர்க்கை நடந்த நாளிலிருந்து இரண்டு நாட்களுக்குள் கீழ்க்கண்ட அசல் சான்றிதழ்களுடன் காலை 10.00 முதல் மாலை 5.00க்குள் கல்லூரிக்கு நேரில் வருகை தந்து சேர்க்கையை உறுதி செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

  1. பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம்.

  2. மாற்றுச்சான்றிதழ் (அசல் மற்றும் 3 நகல்கள்)

  3. சாதிச் சான்றிதழ் (அசல் மற்றும் 3 நகல்கள்)

4. +2 மதிப்பெண் சான்றிதழ் (அசல் மற்றும் 3 நகல்கள்)

5. Passport Size Photo – 3

6. விளையாட்டுச் சான்றிதழ் (அசல் மற்றும் 3 நகல்கள்)

7. உடல் ஊனமுற்றோர் சான்றிதழ் (அசல் மற்றும் 3 நகல்கள்)

8. முன்னாள் இராணுவ வீரர் சான்றிதழ் (அசல் மற்றும் 3 நகல்கள்)

9. தேசிய மாணவர் படை (NCC) சான்றிதழ் (அசல் மற்றும் 3 நகல்கள்)

**குறிப்பு:** விண்ணப்பதாரர்கள் கலந்தாய்வின் போது சிறப்பு ஒதுக்கீடு (Special Quota) கீழ் பாடப்பிரிவை தேர்வு செய்திருப்பின் அவ்விண்ணப்பதாரர்கள் மேலே கொடுக்கப்பட்டுள்ள வரிசை எண். 6, 7, 8, 9 ஆகிய சிறப்புச்சான்றிதழ்களை கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

- ❖ கலந்தாய்வில் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் கல்லூரிக்கு நேரில் வரும் பொழுது மேற்கண்ட சான்றிதழ்களுடன் சேர்க்கைக் கட்டணம் மற்றும் இதரக் கட்டணங்களை கல்லூரி அலுவலகத்தில் செலுத்தி சேர்க்கையை உறுதி செய்ய வேண்டும்.

- ❖ கலந்தாய்வு முடிந்த 2 நாட்களுக்குள் விண்ணப்பதாரர்கள் தங்களுக்குரிய சேர்க்கைக் கட்டணம் மற்றும் இதரக் கட்டணங்களை செலுத்த தவறும் பட்சத்தில் தங்களுக்கான சேர்க்கை இரத்து செய்யப்படும்.

- ❖ விண்ணப்பப் பதிவின் போது பதிவேற்றம் செய்யப்பட்ட தங்களின் மதிப்பெண்கள் மற்றும் இனம் (Community) ஆகிய விபரங்களுக்கு அந்தந்த விண்ணப்பதாரர்களே பொறுப்பாவார். எனவே சான்றிதழ்கள் சரிபார்ப்பின் போது தங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட தங்களின் மதிப்பெண்கள் மற்றும் இனம் (Community) ஆகிய விபரங்களில் மாற்றம் இருக்கும் பட்சத்தில் தங்களின் விண்ணப்பம் இரத்து செய்யப்படும்.

******************